දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650
011-2136700

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011- 2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info @psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/APP/6/836/2019

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2022.02. 28

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 01/2022

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**<u>நாடளாவிய சேவைகளின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமித்தல்</u>**

நாடளாவிய சேவைகளின் விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்த சேவைகளின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு விசேட தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமித்ததன் பின்னர் அப் பதவிகளின் கடமைகளைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அப் பதவிகளுக்கான கடமைகளைக் கையளிக்காது திருப்பி அனுப்புகின்ற சில சம்பவங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் அறிக்கையிடப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் இவ் ஆணைக்குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களைக் கவனத்திற் கொள்ளாது செயற்படுதலானது அரசியலமைப்பின் 61 இ (1) உறுப்புரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய குற்றமொன்றாகக் கருதப்பட முடியுமென இவ் ஆணைக்குழு கருதுகின்றது.

02. விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குறித்த தரத்திற்குரிய பதவிகளின் கடமைகளுக்காக சமுகமளித்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2021 மீது தங்களது கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக விசேட தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரொருவர் விசேட தரத்திற்குரிய பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அந் நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து இரண்டு வார (02) காலப்பகுதியினுள் புதிய பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் அவ் உத்தியோகத்தரின் விசேட தரத்திற்குரிய பதவியுயர்வு இரத்துச் செய்யப்படும். அவ் ஏற்பாடுகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில், புதிய பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்கக் கூடியவாறு உத்தியோகத்தர்களை தங்களது நிறுவனங்களிலிருந்து விடுவிப்பதற்குரிய

நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, வெற்றிடங்கள் நிலவும் பதவிகளின் கடமைகளுக்கு சமுகமளிக்கும் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய பதவியின் கடமைகளைக் கையளிப்பதும் நிறுவனத் தலைவர்கள் என்ற வகையில் தங்களது பொறுப்பாகும் என அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டது.

03. மேலும், விசேட தரத்தைச் சாராத உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் விசேட தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி நியமிப்பு செய்யும் அதிகாரிகளும் நிருவாக அதிகாரிகளும் பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் பணிகளை விசேட தரத்தைச் சாராத உத்தியோகத்தர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ள முடியுமாயின், அப் பதவிகளை விசேட தரத்தைச் சாராத பதவிகளாகக் கருத வேண்டும் என்பதோடு, அது குறித்து பொது திறைசேரிக்கு அறிவித்து அத்தகைய பதவிகளை ஒழிப்பதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மிகவும் பொருத்தமானது எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டது.

04. இந் நிலைமையானது நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு மற்றும் பதவிகளுக்கு நியமித்தல் போன்ற செயன்முறைக்கு பெரிதும் பாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளமையினால் இது குறித்து தங்களது தனிப்பட்ட கவனத்தை செலுத்தி விசேட தரத்திற்குரிய பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு தங்களது நிறுவனத்திற்கு சமுகமளிக்கும் உத்தியோகத்தர்களை அப் பதவிகளுக்கு நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் விசேட தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவருக்கு ஏற்புடைய பதவியின் கடமைக்கு சமுகமளிக்கக் கூடியவாறு உடனடியாக அவ் உத்தியோகத்தரை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய தயவுடன் அறியத் தருகின்றேன்.

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு